**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

10.06.2025

EA.4/2022 in EP.48/2018

Deposition of witness for RW2

| | | |
|---|---|---|
| Name | : | Vinothkumar |
| Father's Name | : | Chelladurai |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.06.2025.

முதல் விசாரணை:

1. நான் சுஸ்லாம் காற்றாலை நிறுவனத்தில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் காற்றாலை நிறுவனத்தில் பணிபுரிவதற்காக நிறுவனத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டையை எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன் ( அசலுடன் ஒப்பிட்டு பார்த்து குறியீடு செய்யப்படுகிறது)

3. 1ம் எதிர்மனுதாரர் எனது உறவினர். மாமா முறை ஆவார். கடந்த 18.11.2022 ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் இடத்தில் உள்ள காற்றாலையை மின் துண்டிக்க செய்ய மின் அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர் வந்ததால் அதை புகைப்படம் எடுப்பதற்காக என்னை அழைத்தார்.

4. நான் 1ம் எதிர்மனுதாரர் இடத்திற்கு போய் மதியம் சுமார் 1 மணியிலிருந்து 2 மணிக்குள் மின் துண்டிப்பு செய்ததை வீடியோ மற்றும் போட்டோவை என்னுடைய அலைபேசியில் பதிவு செய்தேன். என்னுடைய அலைபேசி VIVOY21 நிறுவனத்தைச் சேர்ந்ததாகும். நான் அலைபேசியில் எடுத்த போட்டோ மற்றும் வீடியோவை எனது மடிக்கணினியில் அலைபேசியில் உள்ள புகைப்படத்தை எவ்வித மாற்றமும் செய்யாமல் பதிவிறக்கம் செய்தேன். மடிக்கணினியில் இருந்து குறுந்தகடு மற்றும் புகைப்படமாகவும் மாற்றம் செய்தேன். புகைப்படம் வேறு கடையில் மாற்றம் செய்ததால் அதைப் பொறுத்து சாட்சியால் ஆவணமாக குறியீடு செய்ய இயலாது. குறுந்தகடு மட்டும் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. குறுந்தகடுடன் இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65(பி) சான்றிதழ் இணைக்கிறேன். பிரிவு 65(பி) சான்றிதழ் அசல் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 18.11.2022 ம் தேதி நான் காற்றாலை நிறுவனத்தில் வேலை செய்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

3. நான் இணைப்பை துண்டிக்க வரும் போது மின்வாரிய அதிகாரிகளா என்பதை பரிசோதனை செய்ய அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தேனா என்றால் இல்லை அலுவலகத்தின் பெயர் பொறிக்கப்பட்ட நான்கு சக்கர வாகனம் வந்தது.

4. சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்ன படி நான் 18.11.2022 ம் தேதிக்கான சம்பவத்தை பதிவு செய்யவில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. இவ்வழக்கில் மனுதாரர் எனது மாமா உறவு முறை ஆவார். அவர் அழைத்ததன் பேரில் தான் மனு சொத்து அமைந்திருக்கும் இடத்திற்கு சென்றேன்.

2. மனு சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது.

3. எதிர்மனுதாரர் ராஜ் வழக்கறிஞர் குமஸ்தாவாகவும், இடம் வாங்கிக் கொடுக்கும் இடைத்தரகராகவும் பணிபுரிந்தார் என்றால் சரிதான்.

4. மின்வாரிய 4 அதிகாரிகளுடன் ஒரே ஒரு நீதிமன்ற அமீனா பெண் நபர் வந்தார்.

5. அங்கு வந்த மின்வாரிய அதிகாரிகளின் பெயர் தெரியாது.

6. மனு சொத்திற்கு 18.11.2022 ம் தேதி காற்றாலை நிறுவனத்தில் இருந்து தான் அதிகாரிகள் வந்தார்கள் அவர்கள் மின் வாரிய அதிகாரிகள் அல்ல.

7. மனு சொத்து அமைந்துள்ள இடத்தில் மின் வாரியம் சார்பாக ஒயர்மேன் மட்டுமே வந்திருந்தார்.

8. புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்த அலைபேசி என்னுடையது தான் என்பதற்கான எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை.

9. சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்ன படி நான் 18.11.2022ம் தேதிக்கான சம்பவத்தை பதிவு செய்யவில்லை என்றும் மடிக்கணினியிலும், அலைபேசியிலும் பதிவு செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றும் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு மருமகன் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.